
கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை\ கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கடடுரை \ கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



| | | |
|---|---|---|
| தன்னந்தனியாக | அப்பாவின் பிறந்தநாள் | கொள்ளையடித்து |
| படித்துக்கொண்டிருந்தாள் | பரிசுக்கூடை | மிரட்டினான் |
| கதவைத் தட்டும் | வீட்டினுள் | புகார் |
| அறிமுகம் இல்லாதவர் | கட்டிப்போட்டு | |

**PRIMARY SCHOOL**

**SEMESTRAL ASSESSMENT 2**

**TAMIL LANGUAGE PRIMARY 5 - 2013**

**PAPER 1 – COMPOSITION**

Name: ______________________________

Class: P5 (     )

Date: ______________________________

Total Time : [illegible]

---

30 marks

**Instructions:**

1. Do not turn this page until you are told to do so.
2. There are **two** questions. Please choose and answer **one** question only.

Q1 முதல் Q23 வரையுள்ள வினாகளுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2. 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.

## அ பிரிவு

### A1 வேற்றுமை உருபு

1 முதல் 6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான **வேற்றுமை உருபு** ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

முன்னொரு காலத்தில் ஒரு சிற்றூரில் குடியானவன் ஒருவன் வாழ்ந்தான். அவன் தன் __ (1) __ எண்ணூறு பொற்காசுகளைச் சேர்த்தான். அவனுக்குக் கடுமையான புற்று நோய் உண்டாயிற்று. பத்து வயதில் __ (2) __ வேலன் என்ற மகன் இருந்தான். குடியானவன் தன் நண்பன் வீணனைக் கூப்பிட்டான். "நண்பா! என் __ (3) __ நோய் அதிகமாகிக்கொண்டே வருகிறது. நான் பிழைத்து எழுவேனா என்ற ஐயம் ஏற்படுகிறது. என் மகனோ சிறுவன். அவன் சிறு வேலைகள் செய்து பிழைத்துக்கொள்வான் அந்த __ (4) __ எண்ணூறு பொற்காசுகள் இருக்கின்றன. என் மகன் பெரியவன் ஆனதும், நீ அந்த __ (5) __ அவனிடம் கொடுத்துவிடு," என்று குடியானவன் சொன்னான். சில நாள்களில் குடியானவன் உயிர் நீத்தான். சில ஆண்டுகள் கழித்து வேலன் தனக்குச் சேரவேண்டிய பணத்தை __(6)__ கேட்டான். உடனே அவன் வேலனிடம் நூறு பொற்காசுகளைத் தந்தான். வேலன் தனக்குச் சேரவேண்டிய எண்ணூறு பொற்காசுகளைக் கேட்டுச் சண்டையிட்டான்.

1. (1) உழைப்பின்
   (2) உழைப்பால்
   (3) உழைப்பிற்கு
   (4) உழைப்பிலிருந்து

( )

2. (1) அவனை
(2) அவனிடம்
(3) அவனது ( )
(4) அவனுக்கு

3. (1) என்னுடைய
(2) என்னை
(3) என்னால் ( )
(4) என்னோடு

4. (1) பையை
(2) பையின்
(3) பையா ( )
(4) பையில்

5. (1) பொற்காசுகளிலிருந்து
(2) பொற்காசுகளை
(3) பொற்காசுகளோடு ( )
(4) பொற்காசுகளின்

6. (1) வீணனால்
(2) வீணனுக்கு ( )
(3) வீணனை
(4) வீணனிடம்

## A2 செய்யுள் / பழமொழி

7 முதல் 12 வரையுள்ள **செய்யுள் / பழமொழியை** நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(12 மதிப்பெண்கள்)

7. ______________________ என்று பெயர் எடுக்க நாள் செல்லும்.

(1) தீயவன்
(2) கெட்டவன்
(3) செல்வன் ( )
(4) நல்லவன்

8. செல்வத்துள் செல்வம் ______________________ அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை.

(1) கல்விச்செல்வம்
(2) செவிச்செல்வம்
(3) பொருட்செல்வம்
(4) கலைச்செல்வம்

( )

9. கற்றது கைமண்ணளவு ______________________ உலகளவு.

(1) அறியாதது
(2) படிக்காதது
(3) கல்லாதது
(4) இல்லாதது

( )

10. உடையவன் பாராத ____________________ ஒரு முழம் கட்டை.

(1) வேலை
(2) தொழில்
(3) செயல்
(4) கலை

( )

11. ______________________ அருமை வெயிலில் தெரியும்.

(1) மரத்தின்
(2) குளிரின்
(3) மழையின்
(4) நிழலின்

( )

12. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா ____________________ அறம்.

(1) இயன்றது
(2) முயன்றது
(3) என்றது
(4) சிறந்தது

( )

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். எதையும் புதுமையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருந்தது. காட்டிற்குச் சென்ற அவன் ஆலம் விழுதுகளைப் பிடித்துத் தொங்கியபடி விளையாடிக் கொண்டிருந்த **குரங்குகளைக்** கண்டான். இவற்றிற்கு நாட்டியப் பயிற்சி அளித்தால் அரண்மனை நாட்டியக்காரிகளை விட நன்றாக ஆடும் என்று நினைத்தான். தன் வீரர்களை விட்டு அந்தக் குரங்குகளைப் பிடித்தான். அவற்றை அரண்மனைக்குக் கொண்டு வந்தான்.

கலைஞர்களை அழைத்த அவன் "அந்தக் குரங்குகளுக்கு நாட்டியம் கற்றுத் தர வேண்டும்" என்றான். கலைஞர்களும் குரங்குகளுக்கு நாட்டியப் பயிற்சி அளித்தார்கள். குரங்குகளும் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றன. நாட்டியக்காரர்களைப் போலக் குரங்குகளுக்கு உடை அணிவித்து அரசவைக்கு அழைத்து வந்தார்கள். எல்லோரும் காண அவை நன்றாக நாட்டியம் ஆடின. தன் எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்ந்தான் அரசன். அரசவையில் நாள்தோறும் குரங்குகளின் நாட்டியத்திற்கு ஏற்பாடு செய்தான். அரண்மனை நாட்டியக்காரர்கள் தங்கள் **வாய்ப்பு** போனதே என்று வருந்தினார்கள்.

நாள்தோறும் குரங்குகளின் ஆட்டத்தைப் பார்த்து, அவையினர் எரிச்சல் அடைந்தனர். வழக்கம் போலக் குரங்குகள் நாட்டியமாடத் தொடங்கின. அவையிலிருந்த ஒருவர் கைப்பிடி வேர்க்கடலையை அவற்றின் முன் எறிந்தார். அவ்வளவுதான் ஆடுவதை நிறுத்திய குரங்குகள் வேர்க்கடலையைப் பொறுக்கத் தொடங்கின. அவற்றை வாயில் போட்டுக் கடித்தன. ஒன்றை ஒன்று பார்த்துக் கோபத்துடன் கத்தத் தொடங்கின. அங்கும் இங்கும் பாய்ந்தன. கோபம் கொண்ட அரசன் அவற்றை அடித்து விரட்டுமாறு வீரர்களுக்குக் **கட்டளை** இட்டான். குரங்குகள் அடித்து விரட்டப்பட்டன. அவரவர்க்குரிய வேலையை அவரவர்தான் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்தான் அரசன்.

13 முதல் 17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

13. அரசனின் எண்ணம் என்ன ?

(1) குரங்குகளுக்கு நடனம் கற்றுக் கொடுத்தல்
(2) எதையும் புதுமையாகச் செய்தல்
(3) ஒரு புதுமையான முறையில் நாட்டை ஆள்தல்
(4) ஆலம் விழுதுகளைப் பிடித்துத் தொங்குதல்

( )

14. குரங்குகள் எப்போது அரண்மனை நாட்டியக்காரிகளைவிட சிறப்பாக ஆடும் ?

(1) கலைஞர்களைக் கண்டால்
(2) அரசவைக்கு அழைத்து வந்தால்
(3) எல்லோரும் அவற்றைப் பாராட்டினால்
(4) நடனப் பயிற்சி அளித்தால்

( )

15. குரங்குகள் யாரால் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றன ?

(1) அரசனால்
(2) கலைஞர்களால்
(3) நாட்டியக்காரர்களால்
(4) வீரர்களால்

( )

16. அரசனின் மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன ?

(1) வீரர்கள் தன் எண்ணத்தை நிறைவேற்றியதால்
(2) குரங்குகள் தான் சொன்னதைச் செய்ததால்
(3) அரசவையில் உள்ளவர்கள் அவனைப் பாராட்டியதால்
(4) தன் எண்ணம் நிறைவேறியதால்

( )

17. குரங்குகள் ஏன் ஆடுவதை நிறுத்தின ?

(1) அவற்றிற்குச் சோர்வாக இருந்ததால்
(2) அடித்து விரட்டியதால்
(3) வேர்க்கடலையைக் கண்டதால்
(4) ஒன்றுடன் ஒன்று கடித்துக் கொண்டதால்

( )

B4 சொற்பொருள்

18 முதல் 20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. **அவற்றின் பொருளை உணர்த்தும்** சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

18. குரங்குகளை - (1) மந்திகளை
(2) குயில்களை
(3) தேவாங்குகளை
(4) விலங்குகளை

( )

19. வாய்ப்பு - (1) நாட்டியம்
(2) நேரம்
(3) சந்தர்ப்பம்
(4) சம்பளம்


( )

20. கட்டளை - (1) உத்தரவு
(2) கழகம்
(3) கெஞ்சி
(4) போர்

( )


## B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:



# குடும்ப விழா


ஏற்பாட்டாளர்: இளையர் மன்ற உறுப்பினர்கள்
நாள்: 15/11/2013 - ஞாயிற்றுக்கிழமை
இடம்: ஜூரோங் பூங்கா, தோ சிங் சாலை
நேரம்: காலை 9 மணியிலிருந்து மாலை மணி 6 வரை



ஆடல், பாடல்களுடன் பட்டம் விடும் போட்டிகளும் நடைபெறும். அத்துடன் சிறுவர்களும் இளையர்களும் நீச்சல் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

☼ **சிறப்பு விருந்தினராக திரு. லிம் பெக் சீ** கலந்துகொள்கிறார். இவர் விழாவிற்கு $10.000 வெள்ளி நன்கொடை வழங்கினார். வசதிக் குறைந்தோர்களுக்கு உணவு பொருள்கள் வழங்கப்படும்.

கட்டணம் : இரண்டு வெள்ளி
அதிஷ்டக்குலுக்களும் உண்டு.



இந்த விழா நடைபெறுவதால், அக்கம்பக்கத்தில் வாழும் குடும்பங்கள் ஒற்றுமையாக வாழ வாயப்பு ஏற்படும்.

21 முதல் 23வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. <u>ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.</u> அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

21. இளையர் மன்ற உறுப்பினர்கள் நடத்தும் நிகழ்ச்சி என்ன ?

(1) உணவு பொருள்கள் வழங்கும் விழா
(2) இளையார்களுக்கான நீச்சல் போட்டி விழா
(3) பட்டம் விடும் விழா ( )
(4) குடும்ப விழா

22. இந்த நிகழ்ச்சி நடைபெறுவதின் நோக்கம் என்ன ?

(1) ஜூரோங் பூங்காவைத் திறந்து வைத்தல்
(2) சிறப்பு விருந்தினர் நன்கொடை வழங்குதல்
(3) அக்கம்பக்கத்தில் வாழும் குடும்பங்கள் ஒற்றுமையுடன் பழகுதல் ( )
(4) சிறுவர்கள் இளையர்களின் போட்டித் திறனை வளர்த்தல்

23. இந்த நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுவதற்குக் காரணம் என்ன ?

(1) சிறுவர்களும் இளையர்களும் வந்து கலந்துகொள்வதற்காக
(2) அதிக போக்குவரத்துத் தடை ஏற்படாது என்பதால் ( )
(3) அன்று அனைவரும் ஓய்வாக இருப்பதால்
(4) சிறப்பு விருந்தினர் ஓய்வாக இருப்பதால்

முற்றும்

விடைகளைச் சரி பார்!

Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது.

'ஆ' பிரிவு

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

**பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

24. பாபு மிகவும் இளகிய மனம் படைத்தவன். அவன் சாலையில் காயமுற்றுக் கிடக்கும் பூனை மீது ____________ கொண்டான். 24. ( )

25. பறவை ஒன்று மரக்கிளையில் அமர்ந்திருந்தது. அது மரத்திலிருந்த பழங்களைத் தன் ____________ கொத்தித்தின்றது. 25. ( )

26. என் வீட்டின் அருகிலுள்ள அடுக்குமாடிக் கட்டடம் தீப்பிடித்துக் கொண்டது. அதை ____________ பலரும் பாடுப்பட்டனர். 26. ( )

27. மாலதி தன் தோழிக்கு ஒரு கடிதம் எழுதினாள். பின் அதை ஓர் ____________ போட்டாள். 27. ( )

28. நேற்று தொடர்ந்து மழை பெய்ததால், பல இடங்களில் பெரு ____________ ஏற்பட்டது. 28. ( )

| | |
|---|---|
| (1) அழகால் | (2) அணைக்க |
| (3) உறையில் | (4) இறக்கம் |
| (5) வெல்லம் | (6) அலகால் |
| (7) அனைக்க | (8) உரையில் |
| (9) இரக்கம் | (10) வெள்ளம் |

## C7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.
(14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| வண்ணான் ஒருவனிடம் கழுதையும் நாயும் இருந்தன. கழுதை பகலில் அழுக்கு மூட்டைகளை (29) ________. நாய் அவன் வீட்டைக் காவல் காக்கும். ஆனால், வண்ணானோ அவற்றை அன்புடன் நடத்துவதில்லை. | 29. (    ) |
| ஓரிரவு, ஐந்து (30) ________ அவன் வீட்டிலுள்ள பொருள்களைத் திருட வந்தனர். இதையறிந்த நாய் வந்தவர்களைப் பார்த்துக் குரைக்காமல் அமைதியாக இருந்தது. கழுதை நாயிடம் | 30. (    ) |
| (31) ________ கூறியது. அதற்கு நாய், "கழுதையே! நம் எஜமான் நன்றி கெட்டவன். நம் கடின (32) ________ ஏற்றவாறு உணவளிப்பதில்லை. எனவே, நான் ஏன் அவனை எழுப்ப வேண்டும்," என்று பதில் அளித்தது. | 31. (    )<br>32. (    ) |
| இதைக் கேட்ட கழுதை, தன் (33) ________ மட்டும் கத்திக் கத்தித் தலைவனை எழுப்ப முயன்றது. கழுதை கத்துவதை | 33. (    ) |
| (34) ________ திருடர்கள் மறைந்துகொண்டனர். சினத்துடன் | 34. (    ) |
| எழுந்து வந்தான் எஜமான். அவன் கீழே கிடந்த ஒரு (35) ________ எடுத்து, கழுதையை நையப்புடைத்தான். அதைக் கண்ட நாய் வேதனையுற்றது. | 35. (    ) |

| | | |
|---|---|---|
| (1) குரைக்கும்படி | (2) சேவைக்கு | (3) செவியுற்ற |
| (4) சுமக்கும் | (5) கள்வர்கள் | (6) துவைக்கும் |
| (7) கழியை | (8) உழைப்புக்கு | (9) வழிப்போக்கர்கள் |
| (10) கத்துமாறு | (11) பலங்கொண்ட | (12) வேதனையுடன் |

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

முன்னொரு காலத்தில் `பேதரி` என்ற நகரத்தை ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் தன் ஆட்சியைச் சரியாகக் கவனிக்காமல் அந்தப்புரமே கதி என்றிருந்தான். ஒருநாள் அரண்மனை மேல் மாடத்தில் அரசனும் அரசியும் பலவிதமான பழவகைகளை உண்டபடி மகிழ்ச்சியாக இருந்தனர். பழத்தோல்களைச் சன்னல் வழியாக வெளியே எறிந்தனர். அவ்வழியே வந்த துறவி ஒருவர் அந்தப் பழத்தோல்களை எடுத்துத் தின்றார். இதைப் பார்த்த அரசி "யாரோ ஒரு பிச்சைக்காரன் அரண்மனைக்குள் நுழைந்து நாம் தின்றுபோட்ட பழத்தோல்களை உண்கிறான்" என்றாள்.

"காவலைக் கடந்து அவன் எப்படி உள்ளே வந்தான்?" என்று காவலுக்கு நின்ற வீரர்களைக் கேட்டான் அரசன். உடனே வீரர்கள் ஓடிச் சென்று அந்தத் துறவியை அடித்து அரண்மனைக்கு வெளியே விரட்ட முயன்றனர். வீரர்கள் அடிக்கும்போது கோபப்பட்டு அழுவதற்குப் பதில் துறவி கலகலவெனச் சிரிக்கத் தொடங்கினார். ஆச்சரியமடைந்த வீரர்கள் நடந்ததை அரசனிடம் சொன்னார்கள். "அவனை இங்கே அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான் அரசன். "அடிப்பட்டவுடன் அழுவதற்குப் பதில் ஏன் சிரித்தாய்?" என்று அவன் துறவியைக் கேட்டான். "வெறுந்தோலைத் தின்றதற்கே எனக்கு இந்தத் தண்டனை கிடைத்துள்ளது. அப்படியானால் பழத்தைத் தின்ற உங்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்று கற்பனை செய்தேன். என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஓர் அரசன் எந்நிலையிலும் கோபம் கொள்ளக்கூடாது. காரணக் காரியங்களை ஆராய்ந்தே தண்டனை வழங்க வேண்டும். ஆனால், நீயோ எந்த வித விசாரணையும் இன்றி எனக்குத் தண்டனை வழங்கி உள்ளாய். இதற்கும் சேர்த்து உனக்கு என்ன தண்டனை கிடைக்கும் என நினைத்தேன். சிரித்தேன்," என்றார் துறவி.

உடனே துறவியின் கால்களில் விழுந்த அரசன், "என் அறிவுக் கண்கள் திறந்தன. நான் இனி இத்தகைய தவறுகள் செய்ய மாட்டேன். என்னை

மன்னியுங்கள்" என்று வேண்டினான். அன்று முதல் துறவியின் அறிவுரைபடி அரசன் தன் நகரைச் சிறப்பாக ஆண்டு வந்தான். பேதரி நகர் அரசனும் மக்களும் பல வளர்ச்சிகளைக் கண்டனர்.

**Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)**

*36.* `பேதரி` நகர் அரசன் செய்த தவறு என்ன ? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*37.* அந்தப்புரத்தில் அரசனும் அரசியும் என்ன செய்துகொண்டிருந்தார்கள் ? (2 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

*38.* அரசி எதைக் கண்டாள் ? (3 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

39. வீரர்களின் வியப்பிற்குக் காரணம் என்ன ? (4 மதிப்பெண்கள்)

40. அரசர்கள் தண்டனை வழங்கும்போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் ?
(4 மதிப்பெண்கள்)

41. அரசன் யாரிடம் எதற்காக மன்னிப்பைக் கேட்டான்?
(4 மதிப்பெண்கள்)

முற்றும்
விடைகளைச் சரி பார்!

Primary - 5

# P5 SA2
# TESTPAPER 6

முன்னொரு காலத்தில் ஒரு.........

1. 2 2. 4 3. 1 4. 4 5. 2 6. 4

7. 4 8. 2 9. 3 10. 1 11. 4 12. 1

13. 2 14. 4 15. 2 16. 4 17. 3

18. 1 19. 3 20. 1

21. 4 22. 3 23. 3

24. 9 25. 6 26. 2 27. 3 28. 10

29. 4 30. 5 31. 1 32. 8 33. 11 34. 3 35. 7

36. 'பேதகிரி' நகர் அரசன் ஆட்சியைக் கவனிக்காமல் அந்தப்புரமே கதியாக இருந்தான். இதுவே அவன் செய்த தவறாகும்.

37. அந்தப்புரத்தில் அரசனும் அரசியும் பலவிதமான பழங்களை மகிழ்ச்சியாக உண்டபடி அதன் தோல்களைச் சன்னல் வழியாக வெளியே எறிந்து கொண்டிருந்தனர்.

38. யாரோ ஒரு பிச்சைக்காரன் அவர்கள் வீசிய பழத்தோல்களை எடுத்துத் தின்பதை அரசி கண்டாள்.

39. காவலைக் கடந்து உள்ளே நுழைந்த துறவியை அடித்து விரட்டியபோது கோபப்பட்டு அழுவதற்குப் பதிலாக அவர் கலகலவென சிரித்ததே வீரர்கள் வியப்பதற்குக் காரணமாகும்.

40. அரசர்கள் எந்நிலையிலும் கோபப்படாமல், காரண காரியங்களை ஆராய்ந்து தீர விசாரித்த பிறகே தண்டனை வழங்க வேண்டும்.

41. அரசர் துறவியிடம் மன்னிப்பைக் கேட்டான். காரண காரியங்களை ஆராயாமல் கோபம் கொண்டு எந்த விசாரணையும் செய்யாமல் துறவிக்கு அரசன் தண்டனை வழங்கியதால் அவன் அறிவுக் கண்களைத் திறந்ததற்காக மன்னிப்பைக் கேட்டான்.